RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.34256/ijmrd2134

# Theological concepts in Samanthar's Devaram

## சம்பந்தர் தேவாரத்தில் இறை நெறி

**K. Allirajan** [a, *]

[a] Department of Tamil, Nadar Mahajana Sangam S. Vellaichamy Nadar College, Madurai-625019, Tamil Nadu, India.
*Corresponding author Email: allirajan@gmail.com

DOI: https://doi.org/10.34256/ijmrd2134
Received: 03-06-2021; Revised: 20-07-2021; Accepted: 26-07-2021; Published: 29-07-2021

**Abstract:** A look at Tamil literature reveals a variety of concepts. Sangam literature means two called kaadhal veeram. Moral literature means 'justice' in such a way that bhakti literature means 'vituperu' home birth is the state of salvation that separates from man's body after his life is over. In order to reach that stage, you must receive the blessings of God, the Lord. The servants are those who show the way and religion to the God. The Saivism-based Nayanmars say that the principles of attaining Shiva through siddha are Tevara songs. Gnanasambandar, one of the Nayanmars, speaks of the principle of godly ness that reaches Lord Shiva in his Tevarapan. The article explains the natural events of the places where Shiva temples are situated and describes the devotional dignity of reaching the lord.

**Keywords:** Tamil literature, Gnanasambandar, Nayanmars, Tevara songs

**Language:** **Tamil**

### முன்னுரை

பண்டைய இலக்கியம் தொட்டு இன்றைய இலக்கியமான புதுக்கவிதை இலக்கியம் வரையிலும் நோக்குகின்ற போது பல்வேறு புதுமைக் கோட்பாடுகள் பொதிந்து கிடக்கின்றன. காதல், வீரம் என்ற கருத்துப் பொருண்மைகளைத் தாங்கி நின்று பண்டைய மக்களின் வாழ்க்கை விழுமியங்களைப் பெருமைப்படுத்துகின்றன சங்கப் பனுவல்கள். பின்னர் வந்த கீழ்க்கணக்கு நூல்கள் 'அறத்தை' முதன்மைப் பொருளாகக் கொண்டு எழுந்து நிற்கின்றன (Bhaktivedanta, 2014).

காலத்தின் வளர்ச்சியாலும் மனிதர்களின் சமூகச் சூழலும் அத்தருணத்தில் உருவாகின்ற இலக்கியங்களுக்குக் களமாக அமைகின்றன என்பதே உண்மை. அவ்வகையில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் உதயமான இலக்கியங்களான பக்தி இலக்கியம், மனிதனின் வாழ்க்கையின் சிந்தனையை இறைமார்க்கம் வழியாகக் கொண்டு சென்றன. காரைக்கால் அம்மையார் தொடங்கி சேக்கிழார் வரையிலுமான நாயன்மார்கள் படைத்தளித்த பக்தி இலக்கியங்களுக்குள் பக்திக்கொள்கைகள் இறைவனை அடையும் மார்க்கமாக உணர்த்துகின்றது. நாயன்மார்களில் திருஞான சம்பந்தரின் தேவாரம் பாடல்களில் இறைநெறிக் கோட்பாடுகள் பற்றி இக்கட்டுரை விளக்குகின்றது.

### பக்திநெறியும் ஞானசம்பந்தரும்

'சித்தம்' என்ற சிந்தனையை ஒருமுகப்படுத்தி அதன் வழி இறைவனை அடைந்து முக்தியடைவதே அதாவது இறைவன் அருள் பெற்று பிறவி அடையாத நிலையைக்குச் செல்லும் முறையை 'பக்தி' என்பதாகும். பக்தி என்றால் கடவுள் குரு போன்றவர்களிடம் வைக்கும் பேரன்பும் சீரிய மதிப்பும் என்று தமிழ் பேரகராதி சுட்டுகிறது.

தெய்வீகக் குணங்களைக் கொண்டுள்ளோர் சாஸ்திரங்களின் அதிகாரத் தன்மையை ஏற்று வரையறுக்கப்பட்ட வாழ்க்கை வாழ்ந்து, படிப்படியாக ஆன்மிகப் பக்குவத்தை அடைகின்றனர் என்று பகவத் கீதை குறிப்பிடுகிறது. ஆகவே, மனிதன் மனதைப் பக்குவ நிலையை அடைந்து அதன்வழி இறைவனை அடைய முடியும். என்ற சிந்தனையைக் கூறுவதே பக்தி இலக்கியங்கள் பக்தி இலக்கியங்களை தேவாரப் பாடல்கள் என வகைப்படுத்தப்படுகிறது (Balasubramanian, 2005).

## ஞானசம்பந்தர்

வேதாரப் பாடல்களில் தலையாய சிந்தனைகளை, பக்தியின் உணர்வினை பல்வேறு கோட்பாட்டின் அடிப்படையில் பாடி அருளிய நாயன்மார்களுள் ஞான சம்பந்தரும் ஒருவர், 'இளம் வயதிலேயே உமையவளின் ஞானப்பால் உண்டு, 'தோடுடைய செவியன்' என்று சைவசமயத்தின் கடவுளான சிவனைப் பாடியவர் இவர் அருளிய தேவாரப் பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாக உள்ளது. சைவசமயக் கடவுளான சிவனைப் போற்றிப் பாடிய பாடல்களுள் பல்வேறு நெறிகள் அமைகிறது. திருவையாற்றுப் பதிகத்தில் இறைவனாகிய சிவன் அமைந்து திருவருள் தரும் இவ்வுரின் திருத்தலக் காட்சிகளை இறையருளோடு பிணைத்துக் காட்டுகிறார் (Thirugnanasambandar et al., 2000).

## மரம் ஏறி முகில் பார்க்கும்

சங்கப் புலவர்கள் கருப்பொருள்களை முதன்மைப்படுத்தி அகவுணர்வைப் புலப்படுத்துவது போல ஞானசம்பந்தரும் திருத்தலம் அமைந்திருக்கின்ற இயற்கை வளங்களை உட்படுத்தி, அதனுள் பக்தியினைப் புலுப்படுத்துகிறார் அதனை,

'புலனைந்தும் பொறிகலங்கி நெறி மயங்கி
அறவழிந்திட்டு ஐம்மேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்று
அருள் செய்வான் அமரும் கோயில்
வலம் வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி அமைந்து மரமேறி
முகில் பார்க்கும் திருவையாறே'

என்ற தேவாரப் பாடல் உணர்த்துகிறது. இவற்றில் ஐம்புலன்களும் தம் இயல்புகளினின்று மாறி தனது வழியினின்று மயங்கி அதற்குரிய அறிவும் கெட்டு, பித்த, வாயு, சிலேத்தும் நாளங்களின் மாறுபாட்டால் கபம் பெருகி வருந்தும்போது 'அஞ்சேல்' என அபயம் தருபவனாகிய இறைவன் அமரும் திருக்கோயிலை வளம் வரும் பெண்கள் நடனம் ஆட, முடிவு அதிர, அவ்வொலி கேட்ட சிலமந்திகள் தடுமாற்றம் கொண்டு மேகத்தின் இடியோசை எனக் கருதி, மரங்களில் ஏறி முகில் பார்க்கும் திருவையாறே' என்று திருவையாற்றுத் திருத்தலம் பற்றி கூறுகிறார்.

கண், காது, மெய், அறிவு, போன்றவற்றின் உணர்வினால் வாழக்கூடிய மனிதன் ஐம்புல உணர்வுகளுக்கு ஆட்படாது விட்டுவிட்டு இறைவனாகிய சிவனை அடைகின்ற மார்க்கம் என்ற சித்தம் ஒன்றுபடச் செய்தல் வேண்டும். அச்சமயம் மனிதனுக்கு ஏற்டக்கூடிய கபம் பெருகிய நிலையின் போது, அதாவது சித்தத்தின் முதிர்வின்போது (உலகை மறந்து ஒரு நிலையடையும்போது) இறைவன் என எண்ணத்திற்குள் நிலை நிறுத்தி மகிழ்வோடு ஆடிப்பாடி வருகின்ற பெண்களின் ஒலிகேட்ட குரங்குகள் மரத்தின்மேலே ஏறி நின்று பார்க்கும் என்று திருத்தலம் அமைந்திருக்கும் இயற்கை நிகழ்வு கூறுகிறார்.

ஆக, இறைத்தத்துவத்தை உணர்த்தும் போது இயற்கை நிகழ்வுகளையை இணைத்துக் காட்டியிருப்பது இறை நெறியாகிறது (Thirugnanasambandar et al., 2000).

## சங்குகள் ஈனும் முத்துக்கள்

திருவையாற்றின் கரையும், இரவு நேரக் கடலின் நிகழ்வுகளையும், இறைவனின் சொற்களுக்கு உவமை கூறி புலப்படுத்துகிறார் ஞானசம்பந்தர். அதனை, 'விடலேறு படநாகம் அரைக்கசத்து,

'வெற்பரையன் பாவையோடும்

........................................................

கடலேறத் திரைமோதிக் காவிரியி

னுடன் வந்து கங்குல்; வைகித்

திடலேறிச் சுரிசங்கம் செழுமுத்தங்கு

ஈன்றலைக்கும் திருவையாறே'

என்ற பதிகப்பாடலில் உணர்த்துகிறார். இவற்றில், வலிமை மிகுந்த அரவினை அரையில் கட்டி, உமையம்மையைப் பாகமாகக் கொண்டு இடபத்தின் மேலேறி, இன்சொற்களையுடைவர்களே! என்று கூறிப் பிச்சையேற்ற அடிகளின் கோயில், கடலலைகள் வாயிலாகக் காவிரியினுடன் கலந்து இரவுக் காலங்களில் கரையை அடையும் சங்குகள் ஈனும் முத்துக்கள் விளங்கும் திருவையாறே, என்று நீர்நிலை வளங்களை எடுத்துக் கூறியிருப்பது இயற்கை நெறியாகின்றது.

இவற்றில் இறைவனுடைய உருவ அமைப்பினை எடுத்துக் கூறப்பட்டுள்ளது. சிவத்தை அடையும் சிவனடியார்களின் உடையானது எளிமையுடையதாக இருக்க வேண்டும். தன்னுடைய உருவத்தை அழகுப்படுத்தி அதன் வழியாக இறைவனை அடைதல் கூடாது. ஆடை, அழகு இவற்றிலிருக்கக்கூடிய ஆசையை விட்டு எளிய ஆடை அணிந்து சிவத்தை சிந்தைக்குள் நிலைநிறுத்துவதே சிறந்த பக்தி நெறி என்பதை உணர்த்துகின்றது. இவ்வாறு பக்தி நெறியினை உள்ளார்ந்து உணர்த்தும் போது கடலலைக்குள் வாழ்ந்து வருகின்ற சங்குகளின் வாழ்க்கை நிகழ்வு உணர்த்தப்படுவது பக்தி நெறியாகிறது.

## இறைதேடும் குருகுகள்

இறைவனின் உடல் உருவமைப்பினை எடுத்துரைத்து அதன் வழி சோலையின் அழகினையும் அங்கு இறைதேடும் குருகுகின்ன சூழலும் கூறுகிறார். அதனை,

'கங்களார் கயிலாய மலையாளர்

கானப் பேராளர் மங்கை

........................................................

பொங்காளப்ப பொழில் நுழைந்து கூர்வாயால்

இறகுலர்த்;திக் கூதல் நீங்கிச்

செங்கானல் வெண்குருகு பைங்கானல்

இரை தேடும் திருவையாறே'

என்ற பாடலடிகளில் உணர்த்துகிறது. இவற்றில், கபாலம், கொண்டவர் கயிலாய மலையை உடையவர் காளப் பேராளர் மங்கை பங்கர் திரிசூலம் படையாளர், இடபவாகனர் ஆன இறைவன் திருக்கோயில் தேன் சொரியும் சோலையில், குருகுகள் இரைதேடும் திருவையாறு என்று இயற்கை

நிகழ்வு கூறப்படுகிறது. வெண்ணிறம் கொண்ட குருகுகள் தனக்கு தேவையான இறையினைப்பெற்றெடுத்து உண்டு மகிழ்ந்து இன்புறுவது போல, இங்கு இறைவனைக் காணவரும் அடியவர்களும் சிவனின் அருள் பெற்று மகிழ்வர் என்ற கருத்து உணர்த்தப்படுகிறது.

## தாமரை பூத்த வயல்கள்

திருவையாற்றுத்தலத்தின் வளங்களைக் குறிப்பிட்டு அதன் வழி சைவத்தின் கடவுளாகிய சிவனின் பெருமை கூறப்படுகிறது. இயற்கை வள நெறி கீழ்வரும் பாடல் உணர்த்துகின்றது. அதனை,

'.........................................................................

அருள் புரிந்த மைந்தர் கோயில்

இஞ்சாயல் இளந்தெங்கின் பழம்வீழ்

இளமேதி இரிந்து அங்கு ஓடிச்

செஞ்சாலிக் கதிர் உழக்கிச் செழுங்கமல

வயல் படியும் திருவையாறே'

என்ற பாடல் உணர்த்தும், இவற்றில், அஞ்சாமல் மலையெடுத்த இராவணின் தலைபடுத்தும், அவனது தோளும்; நெறியும் படி அழுத்தி அவனது அகந்தை போக்கியவன் அத்தகு பெருமையுடையவன் சிவன். இப்பெருமான் அமைந்த கோயில் தெங்கின்பழம் இளங்கன்றின் மீது விழ விரைந்து ஓடிய அக்கனறு முற்றிய கதிர்களைச் சிதறச் செய்து தாமரை பூத்த வயல்களிலே சென்று படியும் பெருமை கொண்ட திருவையாறு என்ற இயற்கை வளங்கள் உணர்த்தப்படுகிறது.

## முடிவுரை

பக்தி நெறிக்கு இயற்கை நெறியினை மூலகாரணமாகப் பாடியிருக்கும் மரபு ஞானசம்பந்தரின் தேவாரப் பாடல்களில் காணப்படுகிறது. தேவாரத் திருத்தலமான திருவையாற்றின்ன வளங்கள் செழிப்புற்றுத் திகழ்ந்ததை பாடல்கள் உணர்த்துகிறது. மனதை, சிந்தையை ஒரு நிலைப்படு;த்துகின்ற பக்தி நெறிக்குப் புலபபாட்டி; இயற்கையின் வளங்களின் இன்றியமையாததாகிறது.

இயற்கையின் வளங்கள் மிகுந்திருந்த காலங்களில் பக்தியுணர்வு மேன்மையுற்றத் திகழ்ந்ததை சம்பந்தரின் தேவாரப் பாடல்கள் வழி அறிய முடிகின்றது. இறைநெறிக் கோட்பாட்டிற்கு இயற்கையும் இன்றியமையாததாய்த் திகழ்ந்ததை உணர முடிகின்றது.

## References

Balasubramanian, C., (2005) Tamil Ilakkiya Varalaru, Pavai publications, Madurai, India.

Bhaktivedanta, P.S., (2014) Bhagavad Gita Unmaiyuruvil, Bhaktivedanta Book Trust International, Inc., India.

Thirugnanasambandar, Thirunavukkarasar, Sundarar, (2000) Moovar Devaram, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The author 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License



## Cite this Article

K. Allirajan, Theological concepts in Samanthar's Devaram, Indian Journal of Multilingual Research and Development, Vol 2, Iss 3 (2021) 32-36. DOI: https://doi.org/10.34256/ijmrd2134